BILLS SEC ION

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Saturday, 18th February 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at ten of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Munsif's Court, (Gudiyatham)

*283 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தத்தில் முன்சிப் கோர்ட் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால் எப்போது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) The question does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : சார், சமீபத்திலே ஆந்திராவிலிருந்து சேர்ந்த பகுதிகளைச் சேர்த்துப் பார்த்தால், திருப்பத்தூருக்குப் போவதற்கு 60 மைலுக்கு மேலும், வேலூருக்குப் போவதற்கு 30 மைலுக்கு மேலும் ஆகிற காரணத்தினால், அங்கே இருக்கக்கூடிய 4 லட்சம் மக்கள் பெரிய அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, திருப்பத்தூரிலும், வேலூரிலும் உள்ளது போன்ற அடிஷனல் கோர்ட்டாவது அங்கே ஏற்படுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குடியாத்தம் தாலூகாவிலுள்ள 4 லட்சம் மக்களுக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் பிரதிநிதியாக இருந்தபோதிலும், இந்த 4 லட்சம் மக்களும் வழக்கில் ஈடுபடுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோர்ட்டுகள் எங்கெல்லாம் அவசியமோ, அங்கெல்லாம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஹைகோர்ட் இதைப் பரிசீலனை செய்து, அங்கு கோர்ட்டுக்கு அவசியமில்லை என்று கருதுகிறார்கள். இதுவே அரசாங்கத்தின் கருத்துமாகும்.

SRI V. K. KOTHANDARAMAN : சார், ஹைகோர்ட்டு வேலூரிலும், திருப்பத்தூரிலும் இருக்கக்கூடிய வக்கீல்கள் அசோஷியேஷனை கேட்டு, அவர்கள் நகரத்திலேயே இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, அங்கே கோர்ட்டுக்கு அவசியமில்லை என்று முடிவெடுத்துள்ளார்கள் என்பது கனம் அமைச்சர்

அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, தயவுசெய்து அங்கே ஒரு கோர்ட்டு ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோர்ட்டு எங்கே இருந்தாலும் வக்கீல்களுக்கு குந்தகம் ஏற்படாது. அதைப் பற்றி அவர்களுக்கு கவலையில்லை. ஹைகோர்ட்டுதான் இதைக் கவனிக்க வேண்டும். அதை அரசாங்கம் பரிசீலனை செய்து, அவர்களுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டது. குடியாத்தம் தாலுக்காவுக்கு மட்டும் ஒரு முன்சிப் கோர்ட்டு வேண்டியதில்லை என்று தான் ஹைகோர்ட்டும் கருதுகிறது. அரசாங்கமும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY: கனம் தலைவர் அவர்களே, கோர்ட்டு எங்கேயிருந்தாலும், வக்கீல்களை பாதிக்காது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கட்சியில் சம்பந்தப்பட்டுள்ள ஜனங்கள் கோர்ட்டுக்குச் செல்லுவதில் பாதிக்கப்படுவார்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒவ்வொரு கிராமத்திலும் கோர்ட்டு ஏற்படுத்த முடியாது. கொஞ்சம் தூரமாக இருந்தால், வழக்கில் மக்கள் தொடர்பு வைத்துக் கொள்ளும் மனப்பான்மை வளருவது குறையும்.

Veterinary Hospitals

*296 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் தாலுகாவில் கீழ்க்கண்ட ஊர்களில் கால்நடை ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

1. பேர்ணும்பட்டு;
2. பரதராமி;
3. காட்பாடி;
4. திருவலம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், பேர்ணும்பட்டு, பரதராமி, திருவலம் போன்ற கிராமங்களிலுள்ள விவசாயிகள் கால்நடை வைத்தியத்திற்காக 10, 12 மைல்களுக்கு அப்பால் போகவேண்டியிருக்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரிந்த விஷயம். அதை முன்னிட்டாவது கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆங்காங்கே கால்நடை ஆஸ்பத்திரிகளை எப்படியாவது ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா?